**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண். சி.சி. 360/2021**
**வழக்கு சாட்சி. 4**

| | |
|---|---|
| **பெயர்** | **: மோகனசுந்தரம்** |
| **தந்தை பெயர்** | **: மாரியப்பன்** |
| **கிராமம்** | **:** |
| **தாலுக்கா** | **: திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** |
| **தொழில்** | **: தலைமை காவலர், ஈரோடு** |
| **சமயம்** | **:** |
| **வயது** | **: 43** |

**05.10.2023**
1,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் ஈரோடு, தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.08.2018 ஆம் தேதி நகர் வடக்கு காவல்நிலையத்தில் பணியில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, சார்பு ஆய்வாளர் மகேஷ், சிறப்பு சார்பு ஆய்வாளர் சந்தியாகு ஆரோக்கியம் ஆகியோர்களுடன் குட்கா, புகையிலை விற்பனை தொடர்பாக நகர் வடக்கு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து செய்யும்போது , சாலை ரோடு, டக்ளி பள்ளி பின்கேட் அருகில், பள்ளி சிறுவர்களுக்கு புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், அங்கு சென்று பார்த்தபோது, சிறுவர்களுக்கு வெள்ளை நிற பிளாஸ்டிக் பைகளில் இருந்து விற்பனை செய்துகொண்டிருந்த இரண்டு நபர்களையும், ஒரு சிறுவரையும் சார்பு ஆய்வாளர் பிடித்து விசாரணை செய்ததில் மதியம் நேரங்களில் மேற்படி இரண்டு நபர்களும், சைனி புகையிலை பொருட்களை பணம் கொடுத்தால் தருவார்கள் என்றும், அதை சாப்பிட்டால் தனக்கு போதை வரும் என்றும் சொன்னார்.

விற்பனை செய்த நபர்களை விசாரிக்க தனது பெயர் ராஜபாண்டியன், செந்தில்குமார் என்று சொல்லி தங்களது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அன்றைய தினமே 14.30 மணிக்கு அவர்களை கைது செய்து, ராஜபாண்டியன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் , சாட்சி சதீஷ்குமார், செபாஸ்டின் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து ராஜபாண்டியன் பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சைனிபுகையிலை 20 பாக்கட், RMD புகையிலை-20 பாக்கட், சாந்தி புகையிலை -13 பாக்கட் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியும், அதன்பின்னர் செந்தில்குமார் ஆஜர் செய்த

சாந்தி புகையிலை-20 பாக்கட், RMD புகையிலை -20 பாக்கட், SM ஜர்தா -18 பாக்கட், சைனி புகையிலை-17 பாக்கட் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி அதன்பின்னர் ராஜபாண்டியனின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பெயரில் ரயில்வே குட்சேட் அருகில் உள்ள முட்புதரில் இருந்து ராஜபாண்டியன் எடுத்து ஆஜர் செய்த 4 ரூபாய் மதிப்புள்ள M TOBACCO பாக்கட் 7200(எண்ணிக்கை) , RMD -3600 (எண்ணிக்கை), V1 புகையிலை 19040 (எண்ணிக்கை), சாந்தி புகையிலை மற்றும் சைனி புகையிலை மொத்தம் ரூ.160640/- மதிப்புள்ள புகையிலை பொருட்களை அத்தாட்சியில் கைப்பற்றி 18.30 மணிக்கு எதிரி மற்றும் சொத்துகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 750/2018 சட்டப்பிரிவு 6(a) r/w 24 (1) COTP Act & 77 JJ ACT -ன் படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரோந்துபணிக்கு மூன்றுபேரும் எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை குறிப்பிட்டு விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் புகையிலை எதிரிகள் விற்பதற்காக தனிபட்ட நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் என்னிடம் கொடுக்கவில்லை , சார்பு ஆய்வாளரிடம் கொடுத்துள்ளார்களா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. சம்பவயிடம் அதிக மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள 17.08.2018 ஆம்தேதி அரசு பொதுவிடுமுறை நாள் என்றால் எனக்கு தெரியவில்லை. 16.08.2018 ஆம் தேதி முன்னால் பாரத பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இறந்துவிட்டதால் மத்திய அரசு 17.08.2018 ஆம் தேதி அனைத்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அளித்திருந்தது என்றால் நியாபகம் இல்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகள் இல்லை என்றால் சரியல்ல.

எதிரிகளிடம் நான் சொன்னதுபோல ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அதனடிப்படையில் வழக்கு சொத்துகள் எதுவும்,அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் ரோந்து பணியில் இல்லாமலேயே சம்பவயிடத்தற்கு செல்லாமலேயே உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க அழுத்ததினால் எதிரிகளுக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்ன வேலை செய்து வருகிறார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. எதிரிகள் திண்டுக்கலில் உள்ள கடைகளுக்கு இருசக்கர வாகனத்தில் சென்று, மிட்டாய்கள். பிஸ்கட்டுகள், ரோஜா பாக்குகள் போன்றவைகளை சில்லரை வியாபாரத்திற்காக செய்து வருகிறார்கள் என்றும் இதை தெரிந்துகொண்ட உயர்

அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க புள்ளி விவரக்கணக்கிற்காக எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.10.16 10:54:53 +0530

Judicial Magistrate No.II
Dindigul.